## ஊழல் எதிர்ப்பு இயக்கம், சென்னை -23

நிர்வாகக்குழு கூட்டம் (WhattsApp from 22-11-20 to 29-11-20)

நேர்மை நெறி இதழ் தொடர்ந்து வெளியிட வேண்டுமானால் ஆசிரியர், இணை ஆசிரியர் மற்றும் வெளியீட்டு செயலாளர் பெயர்கள் மாற்ற வேண்டியுள்ளது. ரகுபதி ஐயாவும், பீட்டர் கென்னடி அவர்களும் இறந்து விட்ட படியால் அந்த இடத்தில் வேறு இருவர் தேர்ந்தெடுத்து முறைப்படி பதிவு செய்யவேண்டியுள்ளது. நிர்வாகக்குழு ஒப்பந்தம் கிடைக்கப்பெற்றவுடன் தான் பதிவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

எனவே, கீழ்கண்ட விஷயங்களில் தங்கள் விருப்பத்தை எழுதலாம். . அனைவரின் கருத்துக்களையும் பரிசீலித்து தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1) ஆசிரியராக VR சந்திரன் தொடர்ந்து நீடிக்கலாமா?
2) இணை ஆசிரியர், வெளியீட்டு செயலாளர் ஆகியோருடைய பெயர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.
3) வேறு ஏதாவது மாற்றங்கள்?

உங்கள் கருத்துப்பரிமாற்றங்கள் இதே whataApp-இல் தொடரலாம்.

V கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்
22-11-2020

---

22-11-2020 அன்று தலைவர் N சுப்ரமனியண் அவர்களின் கருத்து

ஆசிரியராக பொது செயலாளர் தான் பணி செய்கிறார்.எனவே, அவர் ஆசிரியராக இருப்பது தான் சரி. இணை ஆசிரியர் பெயரை நீக்கி விடலாம். வெளியீட்டு செயலராக, யார், வெளியீட்டு வேலைகளை செய்கிறாரோ அவரை நியமிக்கலாம். அதை போது செயலர் முன்மொழிய வேண்டுகிறேன்.

25-11-2020 அன்று பொதுச்செயலாளரின் கருத்து.

வெளியீட்டு செயலராக திரு கோவிந்தசாமி அவர்களை நியமிக்கலாம். அவர் தற்போது பொறுப்பு வகிக்கும் செயல்திட்ட செயலாளர் பணிகளையும் சேர்ந்து கவனிக்க வேண்டும்.

மற்ற உறுப்பினர்களின் விருப்பத்தையும் பதிவு செய்யலாம்.

---

28-11-2020 அன்று நினைவூட்டல்

தலைவர் தவிர மற்ற உறுப்பினர்களிடமிருந்து கருத்துக்கள் ஏதும் வரவில்லை. ஏதேனும் கருத்துக்கள் இருந்தால் இன்று இரவுக்குள் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

V கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்
28-11-2020

---

தலைவர் தவிர யாருமே கருத்துக்கள் தெரிவிக்கவில்லை.

ஆசிரியராக பொது செயலாளராகவும் வெளியீட்டு செயலாளராக கோவிந்தசாமியையும் நியமிக்கலாம்.
திரு கோவிந்தசாமி அவர்கள் செயல் திட்ட செயலாளராகவும் செயல்பட வேண்டும்.

எனவே கீழ்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக நிறைவேற்றப்படுகிறது

- நேர்மை நெறி ஆசிரியராகவும் பொது செயலாளர் (V கார்த்திகை ராஜன்) செயல்பட வேண்டும்.
- வெளியீட்டு செயலாளராக திரு பு கோவிந்தசாமியை நியமிக்கிறோம்.
- உதவி ஆசிரியர் தேவையில்லை.

ஒப்பம்
பொதுச்செயலர்

ஒப்பம்
தலைவர்